**"சஹுசக் நிமவும" - 2019 தேசிய புத்தாக்க கண்காட்சிக்காக மாகாண மட்டத்தில் புத்தாக்ககங்களை தெரிவு செய்கின்ற நிகழ்ச்சித் திட்டம்.**

<u>மாகாண மட்ட புத்தாக்க கண்காட்சிப் போட்டியை மேற்கொள்வதற்கான நிபந்தனைகள்</u>

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற "சஹுசக் நிமவும" - 2019 தேசிய புத்தாக்க கண்காட்சிப் போட்டிக்க புத்தாக்குனர்கன் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்படுவார்கள்.

மாகாண மட்டத்தில் நடைபெறுகின்ற விழிப்பூட்டும் நிகழ்ச்சி மற்றும் மாகாண மட்ட புத்தாக்க கண்காட்சி போட்டி நடைபெறுகின்ற நேர அட்டவனை.

| மாகாணம் | விழிப்பூட்டும் நிகழ்சி நடைபெறுகின்ற திகதி (மு.ப.9.30 – பி.ப. 12.00 வரை.) | விழிப்பூட்டும் நிகழ்சி நடைபெறுகின்ற நிலையம்..) | ஆரம்ப கட்ட தெரிவு நடைபெறுகினற் திகதியும் நிலையமும். | விண்ணப்பம் ஏற்றுக்கொள் ளப்படும் முடிவுத் திகதி |
|---|---|---|---|---|
| தென் | 2019.02.20 – புத்தாக்கம் மற்றும் ஆக்கவுரிமைப் பத்திரம் | தொழில்நுட்பக் கல்லூரி, பெலியத்த. | 2019.06.10 - தொழில்நுட்பக் கல்லூரி, பெலியத்த. | 2019.05.03 |
| | 2019.02.21 – புத்தாக்கம் மற்றும் ஆக்கவுரிமைப் பத்திரம் | சணச கேட்போர் கூடம், மாத்தறை. | 2019.06.11 – பௌதிகவியல் பிரிவு, றுஹுனு பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை. | |
| | 2019.02.22 - புத்தாக்கம் மற்றும் ஆக்கவுரிமைப் பத்திரம் | தொழில்நுட்பக் கல்லூரி, காலி. | 2019.06.12 – பொறியியலாளர் பிரிவு, றுஹுனு பல்கலைக்கழகம், ஹபுகல, காலி. | |
| சபரகமுவ | 2019.02.26 - புத்தாக்கம் மற்றும் ஆக்கவுரிமைப் பத்திரம் | தொழில்நுட்பக் கல்லூரி, இரத்தினபுரி. | 2019.05.03 - தொழில்நுட்பக் கல்லூரி, இரத்தினபுரி. | 2019.04.19 |
| வுடமத்திய | 2019.03.01 – புத்தாக்கம் | தொழில்நுட்பக் கல்லூரி, அநுராதபுரம். | 2019.05.09 - தொழில்நுட்பக் கல்லூரி, அநுராதபுரம். | 2019.04.19 |
| | 2019.03.02 – ஆக்கவுரிமைப் பத்திரம். | | | |
| வடமேல் | 2019.03.06 - புத்தாக்கம் | தொழில்நுட்பக் கல்லூரி, குருணாகல.. | 2019.05.15 - தொழில்நுட்பக் கல்லூரி, குருணாகல.. | 2019.04.19 |
| | 2019.03.07 - ஆக்கவுரிமைப் பத்திரம். | | | |
| மத்திய | 2019.03.12 - புத்தாக்கம் | கமநலப் பிரிவு, பேராதனை பல்கலைக்கழகம், பேராதனை. | 2019.06.15 - கமநலப் பிரிவு, பேராதனை பல்கலைக்கழகம், பேராதனை. | 2019.05.03 |
| | 2019.03.13 - ஆக்கவுரிமைப் பத்திரம். | | | |
| கிழக்கு | 2019.03.16 - புத்தாக்கம் | மஹுஜன கல்லூரி, மட்டக்களப்பு. | 2019.05.25 - மஹுஜன கல்லூரி, மட்டக்களப்பு. | 2019.05.03 |
| | 2019.03.17 - ஆக்கவுரிமைப் பத்திரம். | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| வடக்கு | 2019.03.19 - புத்தாக்கம்<br>2019.03.20 - ஆக்கவுரிமைப் பத்திரம். | கணனிப் பிரிவு, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். | 2019.05.27 - கணனிப் பிரிவு, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். | 2019.05.03 |
| ஊவா | 2019.03.30 - புத்தாக்கம் மற்றும் ஆக்கவுரிமைப் பத்திரம் | மிருக வைத்திய பிரிவு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பதுளை. | 2019.06.01 - மிருக வைத்திய பிரிவு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பதுளை. | 2019.05.03 |
| மேல் | 2019.04.04 - புத்தாக்கம்<br>2019.04.05 - ஆக்கவுரிமைப் பத்திரம். | இலங்கை கலா மண்டபம்.கொழும்பு - 07 | 2019.06.20 – தொழில்நுட்பக் கல்லூரி, களுத்துறை.<br>2019.06.21 – குருகுல வித்தியாலயம், களனி.<br>2019.06.22, 2019.06.23 – இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு. | 2019.05.31 |

<u>மாகாண கண்காட்சி போட்டிக்கு பங்குகொள்ளக்கூடிய பிரிவுகள்</u>

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு பிரிவில் போட்டியிட முடியும்

- பாடசாலைப் பிரிவு
- பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி
- வணிகவியல்
- திறந்த

<u>பாடசாலைப் பிரிவு:</u>

- பாடசாலைப் பிரிவு மாணவர்களைப் பொருத்தவரையில் அவர்களின் வயதெல்லை க.பொ.த (உயர்தரம்) இரண்டாம் வருடத்தில் கல்வி கற்கக்கூடியவர்களாக இருப்பதோடு, வேறு பிரிவின் மூலம் விண்ணப்பிக்க முடியாது. உயர்தர மாணவர்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலோடு பாடசாலை மூலம் விண்ணப்பிக்க வேண்டும். இவை சம்பந்தமாக 5ஆவது பக்கத்தை பார்க்கவும்.

- பாடசாலை மட்டத்தில் குழு அடிப்படையில் குறைந்த பட்சம் இரண்டு மாணவர்களுக்கு மாத்திரம் தான் பங்குகொள்ள முடியும்.

- பாடசாலை மட்டத்தில் குழு அடிப்படையில் புத்தாக்கம் முன் வைக்கின்ற போது அவர்கள் இருவரும் ஒரே பாடசாலை மாணவர்களாக இருத்தல் வேண்டும். வேறொரு பாடசாலையின் பங்காளராக அல்லது அங்கத்தவராக தோற்றம் பெற முடியாது.

பாடசாலை மாணவர்கள் உரிய முறைப்படி அதிபரின் உறுதிப்பாட்டுடன் விண்ணப்பிக்க தவறும் பட்சத்தில் , அவை திறந்த போட்டிக்கு உட்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்படும்.

<u>பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பத் துறை</u>

- பல்கலைக்கழக மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் முதலாவது பட்டதாரி பட்டத்தை பெறுவதற்கான தகுதியை பெற்றிருப்பதோடு, தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவர்கள் தற்போது அங்கு கல்வி கற்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
- இரு பிரிவினர்களும் தமது நிலையத்தின் ஊடாகவே விண்ணப்பித்தல் வேண்டும். வேறு முறைகள் மூலம் விண்ணப்பிக்க முடியாது.

- இரு பிரிவினர்களும் தத்தமது கல்லூரி அடையாள அட்டையின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்.
- புத்தாக்கம் என்ற அடிப்படையில் கலாநிதி அவர்களுக்கும் குழு அடிப்படையில் இப்போட்டியில் பங்குகொள்ள முடியும்.

இரு பிரிவு மாணவர்களும் தமது கல்லூரி மூலம் தன்னை அறிமுகப்படுத்தாத பட்சத்தில் தங்கள் திறந்த அடிப்படையிலான போட்டியில் போட்டியிடக்கூயடிவரக்ளாக கருதப்படுவார்கள்.

<u>வணிகவியல் முறை</u>

1. வணிகவியல் சம்பந்தமான போட்டியாளர்களைப் பொருத்தவரையில் அவர்கள் நடுவர்களுக்கு வணிகவியல் பதிவுக்கான சாட்சிகள் முன்வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தோடு அவை சம்பந்தமான முறைப்பாடுகள், அதன் தன்மை, வியாபாரத்தின் போக்கு, ஏற்றுமதி வாய்ப்பு, வருடாந்த வருமானம் போன்றன நடுவர்களுக்கு முன்வைக்கப்படுவதோடு, முக்கியமாக ஆக்கவுரிமைப் பத்திரத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

<u>திறந்த பிரிவு</u>

2. மேலுள்ள பிரிவுகளில் உட்படாதவரக்ள் இவ்வாறான திறந்த பிரிவு அடிப்படையில் விண்ணப்பிக்க முடியும்.

<u>விண்ணப்பப் படிவங்களை அனுப்புவதற்கு தேவையான அறிவரைகள்</u>

தமக்கு பொருத்தமான பிரிவின் ஊடாக மாத்திரம் தான் விண்ணப்பிக்க முடியும். வேறு பிரிவுகளில் விண்ணப்பிக்க முடியாது. அவ்வாறு விண்ணப்பித்தால் அவை ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்படும்.

உங்களால் முன்வைக்கப்படுகின்ற ஒவ்வொரு புத்தாக்கத்துக்கும் ஒவ்வொரு விண்ணப்பம் வீதம் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் ஒரு புத்தாக்கத்துக்கு மேலதிக விபரங்களை முன்வைக்கும் போது அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

குழு அடிப்படையில் ஈடுபடுகின்ற புத்தாக்குனர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். **பிறகு எவ்வித மாற்றங்களும் செய்யப்படலாகாது**.

இதற்கு முன்னர் சமர்ப்பித்த புத்தாக்கங்கள் மற்றும் அபிவிருத்திக்காக முன்வைக்கப்பட்ட ஆக்கங்கள் மீண்டும் போட்டிக்கு முன்வைக்க முடியாது.

புத்தாக்க போட்டியின் போது நடுவர்களுக்கு தேவையான பிரதிகளை கட்டாயம் முன்வைக்கப்படல் வேண்டும்.

இந்த விதிமுறைகளுக்கு புறம்பாக அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் முடிவுத்திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படுவதோடு. கடித உறையின் இடது மேல் மூலையில் **"சஹசக் நிமவும் 2019"** என குறிப்பிட்டு **ஆணையாளர், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு, இல. 46-48, கொட்டா வீதி, பொரலை – 08.** என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கவும்.

காலம் பிந்தி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட உங்கள் விண்ணப்பப் படிவத்தை **"சஹஸக் நிமவும்" 2019** என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு, அவற்றை **ஆணையாளர், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு, இல. 46-48, கொட்டா வீதி, பொரலை – 08.** என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கவும்.

<u>புலமைச் சொத்து உரிமை</u>

கண்காட்சிக்காக முன்வைக்கப்படும் புதிய கண்டுபிடிப்புக்கள் சுய படைப்புக்களாக இருத்தல் வேண்டும்.வேறு நபரொருவரினால் ஆக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்பொன்றை மீளாக்கம் செய்து கண்காட்சிக்கு சமர்ப்பிக்கக்கூடாது. எந்தவொரு வகையிலேனும் அவ்வாறு சமர்பிக்கப்பட்டு வெற்றி பெற்ற சந்தர்ப்பத்தில் அப் புதிய கண்டுப்பிடிப்பின் முதல் உரிமையாளரின் புலமை சொத்து உரிமை மீறப்பட்டுள்ளதென்பது உரிய சான்றுடன் நிரூபனமானால் வழங்கப்பட்ட பரிசுகளையும் அனைத்து சான்றிதழ்களையும் மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளை ஆணைக்குழு மேற்கொள்வதோடு அவ்வாறு மீளக் கையளிக்கவும் தாங்கள் கட்டுப்பட்டுள்ளீர்கள்.

கண்காட்சிக்காக சமர்ப்பிக்கும் தங்களது புதிய கண்டுபிடிப்புக்களுக்கான புலமை சொத்து உரிமையை

பாதுகாத்துக்கொள்வதற்கான (ஆக்கவுரிமை பெற்றுக் கொள்ளல்) நடவடிக்கைகளை தாங்கள் மேற்கொள்ளல் வேண்டும். அதற்கான அடிப்படை நடவடிக்கையாக ஆக்கவுரிமைக்கான விண்ணப்பப்படிவத்தை முன்வைத்தலை குறிப்பிடலாம்.

**போட்டியில் நடுவர்களின் பரிசீலனை**

போட்டியின் போது நடுவர்கள் தமது கடமைகளை மேற்கொள்ளும் போது நீங்கள் உங்கள் புத்தாக்க கண்காட்சி கூடத்தில் இருக்கும்படி தயவாய் வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள். அவ்வாறு இல்லாத பட்சத்தில் உங்கள் புத்தாக்கம் நடுவர்களினால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. அத்தோடு ஆணைக்குழுவும் அதனை பொறுப்பு ஏற்காது.

அதே போன்று நடுவர்களின தீர்மானமே இறுதி முடிவாகும்.

**போட்டியில் பங்குபற்றக்கூடிய தொழிநுட்ப துறைகள்**

**தங்களது புதிய கண்டுபிடிப்பானது பின்வரும் தொழிநுட்ப துறைகளில் ஒரு துறையை மாத்திரம் சார்ந்ததாக இருத்தல் வேண்டும்.**

- மக்கள் பாதுகாப்பும், தேசிய பாதுகாப்பும்
- இரசாயன விஞ்ஞானம்
- உணவியல் முறை
- மருத்துவமும், மருந்தகமும்.
- மரபு மருத்துவம்
- தொழிற்சாலையும், அடிப்படை வசதியும்
- பௌதீகவியல்
- செய்தியும், தொடர்பாடலும்
- விவசாயம்
- விஞ்ஞானமும், தொழில்நுட்பமும்
- சக்தி
- சூழல் பாதுகாப்பு
- போக்குவரத்து
- பொறியியல்